(ஆ) 'தமிழ்நாடு தமிழருக்கே' என்று முதல்வர் சொன்னது குறித்து மத்திய அரசு மாநில அரசிடம் விளக்கம் கோரியிருப்பதாகக் கூறப்படுவது குறித்து.

திரு. கே. டி. கே. தங்கமணி : 'தமிழ்நாடு தமிழருக்கே' என்று சொன்னது சம்பந்தமாக நாடாளுமன்றத்தில் கேள்விகள் கேட்கப்பட்டு நேற்றும் இன்றும் பத்திரிகைகளில் செய்தி வந்திருக்கிறது. அது குறித்து விவரம் கேட்டிருப்ப தாகவும் பத்திரிகைகளில் செய்தி வந்திருக்கிறது. அது சம்பந்தமாக அரசின் சார்பில் விதி 82-இன்கீழ் அறிக்கை சமர்ப்பிக்கப்படுமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அப்படிப்பட்ட தகவல் எதுவும் பேரவைத் தலைவருக்கு வரவில்லை. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரவர்களின் வேண்டுகோளின்படி, திரு. என். டென்னிஸ் அவர்க ளுடைய கவன ஈர்ப்புத் தீர்மானம் நாளைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

(2) கவன ஈர்ப்பு

கஞ்சம் ரெட்டியார்கள் உட்பட, மாநிலத்திலுள்ள ரெட்டியார்கள் சமூகத்தினரைப் பிற்பட்ட வகுப்பினராக அறிவிப்பது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சௌடி எஸ். சுந்தர பாரதி அவர்கள் பின்தங்கிய வகுப்பினர் நலத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கொண்டுவருவார்கள்.

T :)x§ SOWDI S. SUNDARABHARATHI : Sir, I wish to call the attention of the Hon. Minister for Backward Classes to a matter of urgent public importance, namely, the hardship experienced by the students of Reddi (Ganjam) community in Aruppukkottai taluk in getting community certificates to enable them to continue their studies and the necessity to declare the Reddi Community including the Reddis (Ganjam) of Ramanathapuram and other districts as Backward Community.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : பேரவைத் தலைவர் அவர்களே, முன்னாள் ஒருங்கிணைந்த சென்னை மாகாணத்தின் ஒரு பகுதியாக விளங்கிய கஞ்சம் மாவட்டத்தில் வசித்துவந்த ஒரு குறிப்பிட்ட ரெட்டி வகுப்பைச்

சேர்ந்தவர்களுக்கு மட்டுமே நன்மை பயக்கும் வகையில் 1925-ஆம் ஆண்டில் பின்தங்கிய வகுப்பினர் பட்டியலில் கஞ்சம் மாவட்ட ரெட்டிகள் மட்டுமே சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்தனர். அப்போது தமிழ்நாட்டின் பகுதியையோ அல்லது மாகாணத்தின் வேறு பகுதியையோ சேர்ந்த வேறெந்த மாவட்டத்திலும் வசித்து வந்த ரெட்டிகள் அதில் சேர்க்கப்படவில்லை. ரெட்டி (கஞ்சம்) வகுப்பு தொடர்ந்து பின்தங்கிய வகுப்பினர் பட்டியலில் இடம் பெற்றுள்ளது.

வகுப்புச் சான்றிதழ் பெறுவதில் ஏற்படும் இடையூறுகளைப் பொறுத்த வரையில், இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்துள்ளதாவது : இந்த வகுப்பிற்கு அளிக்கப்பட்டுள்ள சலுகைகளைப் பெறும் எண்ணத்துடன் ரெட்டி (கஞ்சம்) வகுப்பைச் சேராத இந்து ரெட்டியார்களும் தங்களை (கஞ்சம்) ரெட்டிகள் என்று கூறிக்கொள்ளத் தொடங்கியுள்ளதோடு வகுப்புச் சான்றிதழ்கள் வழங்குமாறும் கேட்கின்றனர். இது கடந்த 10 ஆண்டுகளாகத்தான் நடைபெற்றுவருகிறது. கடந்த 10 ஆண்டுகளில் அவர்கள் பதிவு செய்துகொண்டுள்ள ஆவணங்களில் அவர்கள் இந்த நோக்கத்துடனேயே தங்களை (கஞ்சம்) ரெட்டி எனப் பதிவு செய்துகொண்டு, தமது வேண்டுகோளுக்குத் துணை நிற்கும் ஆவணம் சான்றாக அவற்றைக் காட்டியுள்ளனர். அருப்புக்கோட்டை வட்டத்தைச் சேர்ந்த இந்த ரெட்டியார்களிடம் உள்ள அதற்கு முந்திய (அதாவது பத்தாண்டுகளுக்கு முந்திய) ஆவணங்களில் அவர்கள் இந்து-ரெட்டியார்கள் என்றே குறிப்பிடப்பட்டுள்ளனர். இந்து ரெட்டியார்கள் என்போர் பொதுவாக ரெட்டியார்களில் ஒரு பிரிவான (கஞ்சம்) ரெட்டி வகுப்புச் சேர்ந்தவர்களுமல்லர்; அவர்கள் அரசினர் சலுகைகளைப் பெறவுரிமையுடையோருமல்லர். தெலுங்கைத் தாய்மொழியாகக் கொண்டுள்ள (கஞ்சம்) ரெட்டி வகுப்பினர் மட்டுமே இச்சலுகையைப் பெறத் தகுதியுடையவர்களாவர். அருப்புக்கோட்டை தாசில்தார் முறைப்படி தகவல்களைச் சரிபார்த்தும் விசாரணை செய்தும் உண்மையாகவே இவ்வகுப்பைச் சேர்ந்த பலருக்கு வகுப்புச் சான்றிதழ்களை வழங்கியுள்ளார். இவ்வாண்டில் இதுவரை 80 சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன. அவர் சான்றிதழ் வழங்குமாறு கேட்டு மனுச்செய்துள்ளவரின் தாய்மொழி அதாவது அவரது வீட்டில் பேசப்படும் மொழி தெலுங்குதான் என்று மனுதாரர்களிடமிருந்தும், கிராம அதிகாரிகளிடமிருந்தும் வாக்குமூலங்களைப் பெற்றுப் பதிவு செய்து கொண்ட பின்னர், உண்மையில் அவ்வகுப்பைச் சேர்ந்தவர்களுக்குச் சான்றிதழ்களை வழங்கியுள்ளார். இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் தெலுங்கு பாடமொழியாக இல்லாதபடியால் இங்கு படிக்கும் மாணவர்கள் தமிழ்ப் பாட மொழிவாயிலாகவே கல்வி பயிலுகின்றனர். எனவே,

மாணவர்கள் தமது மனுக்களில் தமிழைத் தமது தாய்மொழியாகக் குறிப்பிடும் நிலை ஏற்பட்டுள்ளது. இது போன்ற பல நேர்வுகளில், தமிழைத் தாய்மொழியாகக் கொண்டிருப்பவர்கள் எவ்வாறு கஞ்சம் ரெட்டி எனப் பிரிக்கப்பட்டு வகுப்புச் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளனர் என்று விளக்கம் தருமாறு கேட்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வுக் கழகம் தாசில் தாருக்குக் கடிதங்கள் எழுதியுள்ளது. வகுப்புச் சான்றிதழ் வழங்குமாறு மனுச் செய்பவர்கள், அவர்கள் கஞ்சம் ரெட்டி வகுப்பைச் சார்ந்தவர்களென்று மெய்ப்பிப்பதற்கு பத்து ஆண்டுகளுக்கு மூந்திய ஆவணச்சான்றினைக் கொண்டு வந்து காட்ட வேண்டுமென்று அருப்புக்கோட்டைத் தாசில்தார் வற்புறுத்தியுள்ளாரெனத் தெரிகிறது. ஒவ்வொருவரும் தாம் அவ்வகுப்பைச் சேர்ந்தவரென மெய்ப்பிக்க ஏதாவது ஆவணத்தைக் கொண்டுவந்து காட்டு மாறு தாசில்தார் வற்புறுத்த வேண்டியுள்ளது. ஏனெனில், அது அவரைச் சேர்ந்த சொந்தப் பொறுப்பாகும். தெலுங்கைத் தாய்மொழியாகக் கொண் டிராதவர்களுக்குச் சான்றிதழ் வழங்கியதில் அது குறித்து தாசில்தாரைத் தமிழ் நாடு அரசுப் பணியாளர் தேர்வு ஆணைக்குழு விளக்கம் கேட்டுள்ள நேர்வுகள் உள்ளதால் தாசில்தார், வகுப்புச் சான்றிதழ் கேட்கின்ற ஒவ்வொரு வரையும் பற்றிய தகவலை நன்றாகச் சரிபார்க்கவேண்டியுள்ளது. இருப்பினும், சான்றிதழ் வழங்கப்படுவதில் தாமதம் ஏற்படக்கூடாது என்று தாசில்தாருக்குக் கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

ஒரு வகுப்பைப் பிற்பட்ட வகுப்பாக அறிவிப்பதற்குரிய அடிப்படை விதி என்னவெனில், அவ்வகுப்பு சமூக அளவிலும் கல்வி நிலையிலும் பிற்பட்டுள் ளதா என்பதைக் கண்டறிவதாகும்; இது சமூக நிலையில் அல்லது கல்வி நிலையில் பிற்பட்டிருந்தால் மட்டும் போதாது. இதைக்கொண்டு பார்த்தால், சமூக நிலையிலும், கல்வி நிலையிலும் முன்னேறியுள்ள ரெட்டியார் வகுப்பு இந்த அடிப்படை விதிகளை நிறைவுசெய்யவில்லை. எனவே இவ்வகுப்பினரைப் பிற்பட்ட வகுப்பினராகக் கருத இயலாது.

திரு. சௌடி எஸ். சுந்தர பாரதி: அதற்காகத்தான் நான் குறிப்பாக அருப்புக்கோட்டை தாலுக்காவிலுள்ளவர்கள் என்று குறிப்பிட்டேன். இராமநாதபுரம் மாவட்டம், அதற்குப் பக்கத்தில் இருக்கக்கூடிய மதுரை, திருநெல்வேலி மாவட்டங்கள் ஆகிய மூன்று மாவட்டங்களில் இருக்கக்கூடிய ரெட்டி வகுப்பைச் சேர்ந்தவர்கள் எல்லோருமே தெலுங்கு பேசக் கூடியவர்கள், தாய் மொழி பூராவும் தெலுங்குதான். இருந்தாலும், அமைச்ச ரவர்கள் குறிப்பிட்டுக் காட்டியதுபோல், அவர்கள் கல்லூரியில் படிக்க

வேண்டிய நேரங்களில் அவர்களுடைய தாய் மொழி தமிழ் என்று சொல்ல வேண்டிய நிலை இருக்கிறது. அங்கிருக்கும் அந்த வகுப்பைச் சேர்ந்தவர்கள் மிகவும் பிற்பட்ட நிலையில் இருக்கிறார்கள். எல்லோரும் விவசாயிகள். அவர்கள் ஏழைகளாகவும் இருப்பதால், அவர்களைப் பிற்பட்ட வகுப்பினர் என்று சொல்வதற்கு அரசு மீண்டும் ஆலோசிக்குமா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: விதிமுறைப்படி இப்பொழுது கொடுக்கப்பட்டிருப்பது சரி என்பதைக் கனம் உறுப்பினர் அவர்கள் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், அவர் சொன்ன வேண்டுகோளை, சமயம் வரும்போது பரிசிலனை செய்ய சார்க்கார் முற்படும்.

(3) நடைமுறைக் கேள்வி

உரிமைக் குழுவிற்கு அனுப்பாமல், ஓர் அவை உரிமை மீறல் பிரச்சினை மீது பேரவைத் தலைவரே தீர்ப்பு வழங்கலாமா என்பது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் நேற்று ஒரு பாயின்ட் ஆஃப் ஆர்டர் எழுப்பினார்கள். அதற்கு இன்று என்னுடைய முடிவைத் தெரிவிப்பதாகக் கூறியிருந்தேன்.

உரிமை மீறிய செயல் பற்றிய நடவடிக்கை இரு வேறு நிலைகளை உடையது. உரிமை மீறல் செயல் மேலெழுந்தவாரியாக நிகழ்ந்துள்ளதா என்பதை உறுதி செய்வது ஒரு நிலை; இது இரு வகைகளில் உறுதி செய்யப் படும். உரிமை மீறிய நிகழ்ச்சியை, மாண்புமிகு உறுப்பினர் ஒருவர், பேரவைத் தலைவர் அனுமதி பெற்று இவ்வவையில் எழுப்பி, உரிமை மீறல் செயல் மேலெழுந்தவாரியாக நிகழ்ந்துள்ளது என்பதை உறுதி செய்ய விளக்கம் அளித்த பின்னர், பேரவைத் தலைவர், 189-வது விதியின் முற்பகுதிப் படி, உரிமை மீறிய செயல் மேலெழுந்தவாரியாக நிகழ்ந்துள்ளது என முடிவெடுப்பது ஒரு வகை.

192-வது விதியின் முற்பகுதிப்படி உரிமை மீறிய செயல் நிகழ்ந்துள்ளது எனப் பேரவைத் தலைவர், தாமாகவே முடிவெடுப்பது இரண்டாவது வகை.

அவ்வாறு முடிவெடுத்த பின்னர், உரிமைக் குழுவிற்கு அனுப்புவது, அல்லது பேரவையே முடிவெடுப்பது ஆகிய இரு முறைகள் மேற்கொள்ளப் படும். அந்த நிலை வந்து, உரிமைக் குழுவிற்கு அனுப்பும்போது, 189-வது